Registered asa News paper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Da'ly தேசிய தினசரி தபாற் பெட்டி எண: 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது தை 19 ஆம் நாள் றம்ளான் 16 (1-2-64) சனிக்கிழமை இதழ் 355

உங்களுடைய அன்றாட பாவனைக்கு
திறம்
**கே. ஆர். லிங்கன்ஸ்**
காப்பித்தூள், மிளகாய்த்தூள்
புதிய முறையில் தயாரிக்கப்பெற்றது
யாழ்ப்பாணம் பஜார் ஏஜன்ட்
**எம். பரராசசிங்கம்**
சேலம் பீடி ஏஜண்ட்ஸ்,
யாழ்ப்பாணம்.

# தமிழ் தெரிந்தவர் நியமிக்கப்படுவார்

## பட்டினசபை காரியதரிசி விவகாரம் தீர்ந்தது

கொழும்பு, வெள்ளி

காங்கேசன்துறை பட்டினசபைக் காரியதரிசி நியமன விவகாரம் சுமுகமாகத் தீர்ந்துவிட்டதென அறிவிக்கப்படுகிறது. காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே வி. செல்வநாயகமும், பட்டினசபை அங்கத்தவர் திரு. எஸ். சிவனடியார் ஆகியோர் இன்று ஸ்தலஸ்தாபன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியைச் சந்தித்துப் பேசினர். இப்பேச்சுவார்த்தைகளின் முடிவில் காங்கேசன்துறை பட்டினசபைக் காரியதரிசியாகத் தமிழ் தெரிந்த ஒருவரை நியமிப்பதற்கு நிரந்தரக் காரியதரிசி இணக்கம் தெரிவித்தார். பட்டினசபையின் காரியதரிசியாக நியமிக்கப்பட்ட திரு. வி. சி. டி. பெரேராவின் நியமனத்தை வாபஸ்பெறுவதெனவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இரண்டு மாதங்களின் பின்னரே புதிய காரியதரிசி நியமிக்கப்படுவாரென்றும் அதுவரை இவ்வருடம் ஜனவரி மாதம் நடைபெற்றதுபோல் சபையின் நடவடிக்கைகள் நடைபெறவேண்டுமென்றும் இதற்கான செலவுகளைச் சபை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் நிரந்தரக் காரியதரிசி தெரிவித்த யோசனையைத் தூதுகோஷ்டியினர் ஏற்றுக்கொண்டனர்.

## "கறுப்புக் கொடிகள்கட்டி துக்கதினம் அனுஷ்டிக்கவும்"

### திரு. இராசமாணிக்கம் அறிக்கை

களுவாஞ்சிக்குடி, வெள்ளி

சுதந்திர தினத்தை துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டுமென்றும் தமிழ்பேசும் மக்கள் அன்றைய தினத்தில் தங்கள் வீடுகளிலும் ஸ்தலஸ்தாபன சபைக் கட்டிடங்கள் மீதும் கறுப்புக் கொடிகளைத் தொங்கவிடுவதுடன் ஆட்சேபக் கூட்டங்கள் நடத்தி அரசாங்கத்துக்குத் தமது ஆட்சேபக் கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்றும் இலங்கைத் தமிழரசுக்கட்சித் தலைவரும் பட்டிருப்பு எம். பி.யுமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் இன்று விடுத்த ஒரு அறிக்கையில் கேட்டுள்ளார்.

திரு. இராசமாணிக்கம் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

1948-ம் ஆண்டு மாசிமாதம் 4-ந் திகதி இலங்கை 450 வருட அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்டு சுதந்திரமடைந்தது. அந்நியரின் ஆட்சியின்கீழ் அடிமைப்பட்டிருந்த இலங்கை வாழ் சிறுபான்மையினருக்கு இச்சுதந்திரம் எவ்வித மீட்சியையும் அளிக்கவில்லை. இந்நாட்டு மக்களுக்கு அந்நிய ஆட்சியின்போது இழைக்கப்பட்ட அநீதிகளை நீக்க இன்றைய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கும் அதேசமயம் இந்நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களுக்கு புதிய அநீதிகள் இழைக்கப்படுகின்றன.

பெரும்பான்மை மக்கள் சிறுபான்மையினரின் உரிமைகளை பறிக்கக்கூடிய அநீதியான

(6-ம்பக்கம் பார்க்க)

## காமராஜர் தயார்

சேலம், ஜன. 31

தமிழ்நாட்டில் கள்ளுக்கடைகளை திறக்க காமராஜர் தயாராக இருக்கிறார். ஆனால் ராஜாஜி, மற்றும் எதிர்கட்சித் தலைவர்கள் ஏதாவது சொல்வார்கள் என்று தான் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று இங்கு நடைபெற்ற கூட்டத்தில பேசும்போது திராவிட கழகத் தலைவர் ஈ. வே. ரா, பெரியார் கூறினார்.

கள்ளுக்கடைகள் திறக்கப்படுவதை யாராலும் தடுக்க முடியாதென்றும் தமிழ்நாட்டில் விரைவில் கள்ளுக்கடைகள் திறக்கப்படுமென்றும் அவர் மேலும் கூறினார்.

## கைத்தொழில் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

கைத்தொழில் சுவீப்பின் முப்பதாவது சீட்டிழுப்பு நேற்று நடைபெற்றது. அதன் முடிவு வருமாறு:—

(இவை உறுதிப்படவேண்டியவை)

1-வது பரிசு
14 F 0659 ரூபா 19,120

2-வது பரிசு
04 S 0016 ரூபா 9,560

3-வது பரிசு
16 F 0277 ரூபா 4,780

(2-ம் பக்கம் பார்க்க)

## "ஊழியர்களை உடன் வேலைக்குத் திருப்பி எடுக்கவும்"

### காப்புறுதிக் கூட்டு ஸ்தாபனத்திற்கு வர்த்தக சிப்பந்திகள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தின் பொதுவேலை நிறுத்தத்தின்போது வேலை நிறுத்தம் செய்த காப்புறுதிக் கூட்டுஸ்தாபனத்தைச் சேர்ந்த வர்த்தக சிப்பந்திகள் சங்க அங்கத்தவர்களைக் காப்புறுதிக் கூட்டுஸ்தாபன நிர்வாகம் வேலையிலிருந்து நிறுத்திவைத்திருப்பது சங்கத்திற்கு எதிரான நடவடிக்கையாகுமென்றும், இந்த ஊழியர்களை உடனடியாக வேலைக்குத் திருப்பி எடுக்காவிட்டால் முன்னறிவித்தல் எதுவுமின்றி உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டி நேரிடுமென்றும் காப்புறுதிக் கூட்டுஸ்தாபனத்தின் தலைவர் திரு. நிஸங்கா விஜயரத்தினவுக்கு வர்த்தக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வேலையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ள பத்து ஊழியர்களையும் உடனடியாக வேலைக்குத் திருப்பியெடுக்கும்படி சங்கம் கேட்டுள்ளது.

காப்புறுதிக் கூட்டுஸ்தாபனத்தில் வேலையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஊழியர் சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுப்பதென்பதுபற்றி தீர்மானிப்பதற்காக வர்த்தக சிப்பந்திகள் சங்கப் பொதுச்சபை நாளை சனிக்கிழமை கூடவிருக்கிறது.

## ஞாயிற்றுக்கிழமை சந்திரனை அடையும்

கேப்கென்னடி, ஜன, 31

அமெரிக்கா அனுப்பியுள்ள சந்திரமண்டல ராக்கெட் ஞாயிற்றுக்கிழமை சந்திரனை அடையும் என்றும், அதிலுள்ள 6 டெலிவிஷன் கெமராக்கள், சந்திரனை 3000 படங்களை எடுத்தனுப்புமென்றும் அறிவிக்கப்படுகிறது.

## உண்ணாவிரதத்தைக் கைவிட ஜயசூரியா மறுப்பு

### தகநாயகாவின் கோரிக்கையை நிராகரித்தார்

கண்டி, வெள்ளி

உண்ணாவிரதத்தை கைவிடுமாறு முன்னாள் பிரதமரும், காலி எம். பி.யுமான டாக்டர் டபிள்யு. தகநாயக்கா விடுத்த வேண்டுகோளைப் பேராசிரியர் எப். ஆர். ஜயசூரியா நிராகரித்துவிட்டார்.

உண்ணாவிரதத்தை கைவிட்டுவிட்டு தற்போதைய பதவியையும் உதறித்தள்ளிவிட்டுப் பரந்த அரசியல் வாழ்வில் இறங்கும்படி டாக்டர் தகநாயக்கா திரு. ஜயசூரியாவைக் கேட்டிருந்தார்.

சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதென்ற உங்கள முடிவு தோல்வி மனப்பான்மையையே காட்டுகிறது. பொதுவாழ்வில் ஈடுபடுபவர்களுக்கு ஏமாற்றமும் தோல்வியும் கிடைக்கும். ஆனாலும் மகிழ்ச்சியை ... கவலையையும், தோல்வியையும், வெற்றியையும், நீதியையும், அநீதியையும் சமமாக மதிப்பவனுக்கே வாழ்க்கையில் நிரந்தர மகிழ்ச்சி கிடைக்கும் என்று டாக்டர் தகநாயக்கா தமது கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

சென்ற 25 வருட காலமாகத் தமது நண்பனாக உள்ள டாக்டர் தகநாயக்கா தமக்கு எழுதியுள்ள கடிதத்தைக் கண்டு தாம் மகிழ்ச்சியடைவதாகத் திரு. ஜயசூரியா தமது பதிலில் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த வழியைத் தவிர வேறு மார்க்கம் இல்லையாதலால் உங்களது வேண்டுகோளை ஏற்கமுடியாததற்காக உங்களிடம் மன்னிப்பு கோருகின்றேன் என்று திரு. ஜயசூரியா தெரிவித்துள்ளார்

## திருமதி சத்தியமூர்த்தி காலமானர்

சென்னை, ஜன.31

தேசபக்தர் சத்தியமூர்த்தியின் மனைவி திருமதி பாலசுந்தரம்பாள் இன்று காலை சென்னையில் அவரது இல்லத்தில் காலமானர். இவருக்கு வயது 58.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

### மணிவாக்கு

மனிதனின் உரிமைகள் ஆண்டவனுல் அளிக்கப்பட்டவை. அவை அரசாங்கத்தின் பெருந்தன்மையினுல் கிடைப்பவை அல்ல.

— ஜோன் கென்னடி.

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 889

யாழ்ப்பாணம் முசோபகிருது ஆண்டு
தை மீ 19 உ (12—64)

## சேர் அட்டிகலேயின் கருத்து

பல்கலைக்கழகக்கமிஷன் அறிக்கையில் கூறப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளித்து ஒரு மகஜரை பல்கலைக்கழக துணைவேந்தர் சேர் நிக்கலஸ் அட்டிகலே, கவர்னர் ஜெனரலிடம் சமர்ப்பித்திருக்கிறுர். கமிஷன் தனது அறிக்கையில் தமக்கெதிராகவே பல குற்றச்சாட்டுக்களையும் சுமத்தியிருப்பதாகவும் கமிஷன் குறிப்பிட்டுள்ளதுபோல் நிலைமை மோசமானதாக இருக்குமானுல் அதற்குள்ள ஒரேவழி துணைவேந்தரின் பதவிக்காலம் முடிவடைந்ததும் அவருக்குப் பதிலாக வேருெருவரை நியமிப்பதுதான் என்றும் அவரே கூறுகிறுர். பல்கலைக்கழகத்திலுள்ள நிலைமைபற்றிய குற்றச்சாட்டுக்களுக்கு துணைவேந்தர் சரியான முறையில் சரியான பதிலளிக்காமல் மழுப்புவது போல் தோன்றுகிறதெனினும் அதைப்பற்றி நாம் இங்கு, இப்பொழுது விரிவாக ஆராய விரும்பவில்லை.

ஆனுலும் இலங்கைக்கு இன்னும் ஐந்து பல்கலைக்கழகங்களாவது வேண்டும் என்ற சேர் நிக்கலஸின் கருத்தை யாரும் வரவேற்கவே செய்வர். இப்பொழுதுள்ள பல்கலைக்கழகத்தில் இடநெருக்கடி உள்ள தென்பதையும் அதைத் தீர்ப்பதற்கு பணமில்லையென்பதையும் சேர் நிக்கலஸ் தமது மகஜரில் குறிப்பிட்டிருக்கிறுர். இலங்கையில் பல்கலைக்கழகத்தில் உயர்தரக் கல்வி பெறுவதற்கு வாய்ப்பில்லாத பெருந்தொகையான மாணவர்கள் வெளிநாடுகளுக்கும் சென்று கல்விபெறும் வாய்ப்பும் முன்போல இல்லாது கஷ்டமடைகின்றனர். வெளிநாட்டில் பட்டப்படிப்பு முடித்து வந்தவர்களுக்கு இங்கு வேலைவாய்ப்புக் கிடைப்பதும் கஷ்டமாகமாகவுள்ளது. இந்நிலையில் இங்கு மேலும் பல்கலைக்கழகங்கள் நிறுவ வேண்டியது அவசியமாகும்.

இதேசமயம் யாழ்ப்பாணத்தில் ஒருபல்கலைக்கழகம் நிறுவ வேண்டியதன் அவசியத்தையும் சேர் அட்டிகலே சுட்டிக்காட்டியுள்ளாரெனினும் அதன் போதனுமொழிபற்றி கேள்விக்குறியுடன் நிறுத்தியுள்ளார். யாழ்ப்பாணத்தில்ஒரு பல்கலைக்கழகம் நிறுவ வேண்டிய தன் அவசியத்தை பல்கலைக் ழகக் கமிஷன் முன் சாட்சியமளித்த கல்விமான்கள் பலர் வற்புறுத்தியிருந்தனர். இங்கு ஒரு பல்கலைக்கழகத்லத நிறுவுவதற்கு அ சாங்கம் ஒப்புக் கொண்டு அதற்கான நடவடிக்கைகளைச் செய்யப் போவதாக வாக்குறுதியளித்திருந்தும் இதுவரை அதற்கான முயற்சிகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்திலும் சரி வேறு எந்தப் பகுதியிலானுலும்சரி தமிழ்பேசும் மக்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டுமென்பதையும் அதன் போதனுமொழி தமிழாகவே இருக்க வேண்டுமென்பதையும் சேர் நிக்கலஸ் அட்டிகலே உட்பட அனைவரும் உணராமலிருக்க முடியாது. இதை எடுத்துச் சொல்லும் துணிவுதான் வேண்டும்.

## சனசமூகநிலைய ஆண்டுவிழா

அளவெட்டி, வெள்ளி

அளவெட்டி வடக்கு சனசமூக நிலைய 16-வது ஆண்டு விழா சமீபத்தில் நிலைய மண்டபத்தில் திரு. எஸ். வி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

இளைஞரின் எதிர்காலம்பற்றி திரு. சு. ஸ்ரீ பாஸ்கரனும், 'இளங்கோ கண்ட பெண்மை' பற்றி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் 'சனசமூக நிலையங்களின் பணி' என்பதுபற்றி திரு. சி. ஆறுமுகமும் உரை நிகழ்த்தினர். பொலிஸ் உத்தியோகத்தர் திரு. எஸ். வி. மூர்த்தி, சமூக குற்றங்கள்பற்றிப் பேசினர்.

நாதஸ்வர வித்துவான் திரு என் கே பத்மநாதனுக்கு வலிவடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றபின் உத்தியோகஸ்தர் தெரிவில் தலைவராக திரு வ க செல்லத்துரையும் காரியதரிசியாக திரு. இ. செந்திவேலும் தனதிகாரியாக திரு. அ. சிவசாமியும் தெரிவுசெய்யப்பெற்றனர்.

## "நேர்மையான சங்கங்கள் வேண்டும்"

சாவகச்சேரி, வெள்ளி

"தமிழரின் வருங்கால நிலை எல்லோரும் சிந்திக்க வேண்டிய நிலையாக விருக்கிறது. எதிர் காலத்தில் பண நெருக்கடி, பொருளாதார நெருக்கடி இப்போதிருப்பதை விட அதிக மோசமாக வரும். இந் நெருக்கடிகளைப் போக்க வழி வகுக்க வேண்டும். ஐக்கிய நாணயசங்கங்கள், கிராம சங்கங்கள் முன்னேற்பாடாகப் பொருளாதாரப் பிரச்சனையை போக்க முன்னின்று உழைக்க வேண்டும். நீதி, நேர்மை, உண்மை உள்ள சங்கங்களே பொருளாதாரப் பிரச்சனைகளைப் போக்க வல்லன".

இவ்வாறு சைவப்புலவர் திரு. எஸ். சுப்பையா சங்கத்தானை ஐக்கிய நாணய சங்க 32-வது வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

முப்பத்திமூன்ருமாண்டு உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் சபையோரால் தெரிவு செய்யப்பெயற்னர்.

தலைவர்: திரு. ச. சுப்பையா, உப-தலைவர்கள்: திரு. ச. வேலுப்பிள்ளை, சி. வேலுப்பிள்ளை, காரியதரிசி: திரு. சு. முருகேசு, தனுதிகாரி: திரு. சு. சரவணமுத்து.

நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர்கள் வ வைரமுத்து, க. சுப்பிரமணியம், ச பொன்னையா, தா. சின்னையா, வி. செல்லையா, கு. சங்கரப்பிள்ளை என்பவர்கள் தெரிவு செய்யப் பெற்றனர்.

## கூட்டுறவு காரியாலய நிலைமை
### மந்திரிக்கு பொத்துவில் எம். பி. மகஜர்

அக்கரைப்பற்று, வெள்ளி

கல்முனையில் ஒரு கூட்டுறவுக் காரியாலயம் பெயருக்காக இயங்கிவருகிறதே தவிர பொதுமக்களின் தேவைக்காக இருப்பது போலத் தெரியவில்லை. போதுமான உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தினுல் வேலைகள் பெருமளவு தேங்கிக் கிடக்கிறது கடந்த ஒரு மாதத்துக்கு மேல் பியன்கள்கூட இல்லாத நிலையிலே இந்தக் காரியாலயம் இயங்கிக்கொண்டு வருகிற தென்ருல் எவ்வளவு மோசமான நிலையில் இந்தக் காரியாலயம் இயங்கிக்கொண்டு வருகிறதென்பதை சொல்லவும் வேண்டுமா? இவ்வாறு பொத்துவில் தொகுதி எம். பி ஜனப் எம். ஏ. அப்துல்மஜீது கூட்டுறவு மந்திரி திரு. பீலிக்ஸ டயஸ் பண்டாரநாயக்காவின் சொந்தக் கவனத்துக்கு அனுப்பிய மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

பிரஸ்தாப காரியாலயத்தில் குறைந்த பட்சம் 49 உத்தியோகத்தர்கள் கடமையாற்ற வேண்டுமென்று காரியாலய நிர்வாக அறிக்கை கூறுகிறது. ஆனுல் 24 உத்தியோகத்தர்கள்தான் இப்போது 49 உத்தியோகத்தர்கள் செய்யவேண்டிய வேலைகளைச் செய்து கொண்டுவருகிருர்கள்.

1-1-64-ந் திகதியில் 29 உத்தியோகத்தர்கள் கல்முனைக் காரியாலயத்துக்கு மாற்றப்பட்டார்கள். ஆனுல் 9 உத்தியோகஸ்தர்கள் மாத்திரமே வந்து சேர்ந்திருக்கிருர்கள். ஏனையோர்களின் மாற்றத்துக்கு என்னதான் நடந்தது என்று கூடத் தெரியாது. மட்டக்களப்பின் தென்பகுதி மக்களுக்கு கல்முனை கூட்டுறவுக் காரியாலயம் மிகவும் முக்கியமானதாக இருந்தபொழுதிலும் இது சரியான முறையில் மக்களுக்குச் சேவையாற்றக் கூடிய முறையில் நடைபெறவில்லை என்றும் அந்த மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## "சமையலறையை விட்டு வெளிவருக"
### பெண்களுக்கு எம். பி. யோசனை

யக்கல, வெள்ளி

"இலங்கைப் பெண்கள் எதிர்காலத்தில் சமையலறையை விட்டு தேசசேவைக்கு முன்வரவேண்டும்" என கம்பகா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா இங்கு நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும்போது கூறினர்.

பெண்கள் தங்களிடமுள்ள அற்ப தகராறுகளை விட்டு விட்டு, உலகின் இதரநாடுகளைப் பின்பற்றி பொதுவாழ்வில் ஈடுபட முன்வரவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## அரசாங்கம் விளக்கம் கொடுக்கும்

கொழும்பு, வெள்ளி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடந்த காலங்களில் செய்தவை பற்றியும், இனி அதன் வருங்கால திட்டம்பற்றியும், பொருளாதார பிரச்னைகளுக்கான காரணங்கள்பற்றியும் மக்களுக்கு விளக்கிக் கூறுவதற்காக நாட்டின் பல பாகங்களிலும் கூட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாளை முதல் கூட்டம் நடைபெறும். பிரதம மந்திரி தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் 6 மந்திரிகள் கலந்துகொள்வார்கள். இதுபோன்ற கூட்டங்கள் பல நடைபெறுமெனவும் அவற்றில் மந்திரிகள் அரசாங்கத்தின் சாதனைகள், குறைபாடுகள்பற்றி விளக்கம் தெரிவிப்பார்கள்எனவும் கூறப்படுகிறது.

## லிகிதர் வெளிநடப்பு
### விசாரணை நீடிப்பு

கொழும்பு, வெள்ளி

யாழ்ப்பாணம் சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயத்திலிருந்து ஆறு சிங்களக் குமாஸ்தாக்கள் வெளிநடப்புச் செய்தது சம்பந்தமாக சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி விசாரணை செய்து வருகிறுர்.

சுகாதாரசேவை யாழ்ப்பாணப் பகுதி அத்தியட்சகர், கணக்காளர் ஆகியோர் விசாரணைக்கு அழைக்கப்பட்டு அதில் கலந்துகொண்டுள்ளனர். சுகாதாரசேவை சனிஷ்டஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகளும் இவ் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

29-ந் திகதி ஆரம்பித்த விசாரணை இன்னும் முடிவடையவில்லை. 3-ந் திகதி திங்கட்கிழமையும் தொடர்ந்து நடைபெறுமெனத் தெரியவருகிறது.

## டாக்காவில் ஊரடங்கு ரத்து

டாக்கா, ஜன, 31

டாக்காவிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் நேற்றிரவு முதல் ஊரடங்குச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டது. ஆனுல் 4 பேருக்கு மேல் கூடக்கூடாது என்ற தடைஉத்தரவு அமுலில் இருந்து வரும்.

## கைத்தொழில் . . .

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

தலா ரூ. 500 பெறும் டிக்கட்டுகள்.

| | |
|---|---|
| 11 B 0695 | 08 T 0575 |
| 04 N 0537 | 07 X 0260 |
| 15 F 0665 | 14 K 0163 |
| 04 K 0323 | 02 E 0348 |
| 03 Y 0613 | 02 F 0639 |
| 08 Y 0469 | 17 G 0644 |
| 10 P 0279 | 18 N 0339 |
| 08 L 0026 | 16 E 0533 |
| 13 P 0672 | 05 Z 0202 |
| 17 V 0939 | 15 Q 0051 |
| 14 L 0083 | 09 G 0335 |
| 14 R 0233 | 01 P 0831 |
| 16 X 0692 | 08 B 0187 |
| 16 M 0914 | 12 T 0359 |
| 11 E 0705 | 04 W 0476 |
| 14 N 0506 | 07 E 0914 |
| 02 F 0119 | 05 G 0584 |
| 15 T 0281 | 15 Q 0924 |
| 17 R 0377 | 14 C 0918 |
| 01 L 0045 | 18 U 0765 |
| 12 P 0016 | 18 G 0428 |
| 16 S 0580 | 03 D 0616 |
| 18 T 0580 | 09 B 0085 |
| 14 L 0729 | 06 P 0736 |
| 08 E 0043 | 17 S 0092 |
| 02 S 0720 | 07 U 0045 |
| 18 U 0077 | 18 M 0176 |
| 03 F 0217 | 11 B 0075 |
| 07 T 0832 | 04 Q 0593 |
| 14 S 0204 | 08 W 0976 |
| 12 Y 0612 | 01 A 0 94 |
| 01 I 0745 | 03 M 0043 |
| 05 P 0578 | 11 E 0399 |
| 01 N 0881 | 17 C 0351 |
| 18 F 0128 | 07 L 6722 |
| 18 A 0793 | 05 Q 08 9 |
| 10 W 0204 | 06 R 0341 |
| 02 Y 0035 | 15 K 0867 |
| 17 Y 0653 | 12 A 0824 |
| 02 G 0907 | 02 K 0413 |
| 11 W 0311 | 14 W 0536 |
| 05 M 0256 | 07 F 0405 |
| 06 F 0742 | 11 V 0070 |
| 09 N 0449 | 17 C 0365 |
| 18 A 0637 | 15 Z 0674 |
| 11 K 0534 | 05 K 0168 |
| 10 Z 0792 | 05 U 0065 |
| 12 W 0499 | 11 E 0640 |
| 11 M 0293 | 13 Z 0227 |
| 01 G 0173 | 10 W 0593 |

தலா ரூபா 250 பெறும் டிக்கட்டுகள்:

| | |
|---|---|
| 14 A 0659 | 14 N 0659 |
| 14 B 0659 | 14 P 0659 |
| 14 C 0659 | 14 Q 0659 |
| 14 D 0659 | 14 R 0659 |
| 14 E 0659 | 14 S 0659 |
| 14 G 0659 | 14 T 0659 |
| 14 H 0659 | 14 U 0659 |
| 14 I 0659 | 14 V 0559 |
| 14 J 0659 | 14 W 0659 |
| 14 K 0659 | 14 X 0659 |
| 14 L 0559 | 14 Y 0659 |
| 14 M0659 | 14 Z 0659 |

## சிங்கள 'செக்' பற்றி ஆராய்வார்கள்

மட்டக்களப்பு, வெள்ளி

கீழ்மாகாண உதவிவித்தியாதிபதி இப்பகுதி ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கும்போது சிங்கள 'செக்'களை வழங்குமாறு உத்தரவிட்டது பற்றி எவ்வித நடவடிக்கை எடுக்கலாம் என்பதுபற்றி ஆராயுமுகமாக இங்குள்ள மூன்று பெரிய ஆசிரியசங்கங்கள் விரைவில்கூடி ஆராயவிருக்கின்றன. பயிற்றப்பட்ட ஆசிரியர்சங்கம், மட்டக்களப்பு ஆசிரியர்சங்கம், அகில இலங்கைத்தமிழாசிரியர் சங்கத்தின் மட்டக்களப்புக்கிளை ஆகிய மூன்று சங்கங்களும் இதுபற்றி ஆராயவிருக்கின்றன. பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கத்தின் காரியதரிசி மற்றும் இரு சங்கங்களையும் சிங்களத்தில் செக் வழங்கவேண்டும் என்ற உத்தரவு பற்றி ஆராய்வதற்காக பிரதிநிதிகளை அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளார்.

## விறகுகாலைகளில் மரங்கள் பழுதடைகின்றன

கொழும்பு, வெள்ளி

வனவிலாகாவைச் சேர்ந்த பல விறகுகாலைகளில் பல லட்சம் ரூபாய்கள் பெறுமதியான பலரகமான மரங்கள் பல வருடங்களாகத் தேங்கிக் கிடப்பதாகக் கூறப்படுகிறது. சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக இந்த விலையுயர்ந்த மரங்கள் வாங்குவாரற்று பழுதடைந்துவருவதாகவும் கூறப்படுகிறது. ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சமயத்துக்குச் சமயம் வாங்கப்படும் இந்த மரங்கள் விற்கப்படாமல் நஷ்டமேற்படுகிறது. வீடுகட்டுவதற்காக மரங்கள் வாங்குவதற்கு விண்ணப்பிப்போருக்கு இலாகா பெர்மிட் வழங்க ஆறு மாதங்களுக்கு மேல கிறது. இதற்கிடையில் அவர்கள் தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்து மரங்களை வாங்கி உபயோகிக்கின்றனர் இதனுலேயே பல வருடகாலமாக விலையுயர்ந்த மரங்கள் தேங்கிக் கிடந்து பழுதடைகின்றன.

## மண்டபம் திறப்புவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

கந்தர்மடம் ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான மகாமண்டபத்தை வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தான ஆதீனகர்த்தா திரு வை கந்தப்ப செட்டியார் திறந்து வைத்தார்.

நாவலர் பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. திருநாவுக்கரசு, குமாரசாமிப்புலவர் ஆகியோர் திறப்புவிழாவில் பேசினர்கள்.

## மண்டலசார் . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிகிறது. சீனப் பிரதமர் திரு சூ-என்-லாய், தற்போது மேற்கொண்டிருக்கும் தமது நீண்ட ஆபிரிக்க சுற்றுப்பிரயாணத்தின்போது பல நாட்டுத் தலைவர்களுடன் இத்தகைய மகாநாடு ஒன்றுக்கு ஏற்பாடு செய்வதுபற்றி பேச்சு நடத்திவருகிறுர் என அறிவிக்கப்படுகிறது சில ஆபிரிக்க நாடுகள் திரு. சூவின் இந்த விருப்பத்தை ஆதரித்திருக்கின்றன.

திரு. சூ என் லாய் அடுத்த மாதம் பாகிஸ்தானில் 10 நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்வதற்கு வருகிறுர். அப்போது ஆசிய-ஆபிரிக்க மகாநாடு ஒன்றைக் கூட்டுவது பற்றிய முயற்சிபற்றித் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிகிறது.

பாகிஸ்தான் ஜனதிபதி பீல்ட்மார்ஷல் அயூப்கான், இலங்கைக்கு விஜயம செய்திருந்தபோது இத்தகைய மகாநாட்டுக்கு இலங்கையின் ஆதரவைக் கோரியிருந்தார். ஆசிய ஆபிரிக்க மகாநாடு ஒன்று நடைபெறவேண்டும் என இந்தோனேஷியா வெகு காலமாகவே வற்புறுத்திவந்திருக்கிறது.

# அமெரிக்காவும் ரஷ்யாவும் அனுப்பிய ராக்கெட்டுகள்

## ஒன்று சந்திரனை அடையும்; இரண்டு அயனவெளியில் சுற்றும்

மாஸ்கோ, ஜன. 31

அமெரிக்காவும் ரஷ்யாவும் மிக முக்கிய ராக்கெட்டுகளை வானவெளிக்கு அனுப்பியிருக்கின்றன. கேப்கென்னடியிலிருந்து அமெரிக்கா சந்திரனுக்கு ஒரு ராக்கெட்டை அனுப்பி வைத்திருக்கிறது. 66 மணிநேரம் பிரயாணம் செய்து, நாளைக்காலை அது சந்திரனை அடையும் என அறிவிக்கப்படுகிறது. 4 வருடங்களுக்கு முன் ரஷ்யர்கள் அனுப்பிய ஒரு ராக்கெட், சந்திரனின் மேல்பகுதியைப் புகைப்படம் பிடித்தது ஞாபகமிருக்கும்.

ரஷ்யா இன்று இரு முக்கிய வான்வெளிக் கிரகங்களை அனுப்பியிருக்கிறது. இரண்டும் வெவ்வேறு திசைகளில் பூமியைச் சுற்றி வருகையில் அனுப்பப்பட்டிருக்கின்றன. இதில் ஒன்று இரண்டரை மணிநேரத்திற்கு ஒருதடவையும் மற்றொன்று 22 மணி 40 நிமிஷத்திற்கொரு தடவையும் பூப்பிரதட்சணம் செய்யும். ஏற்கெனவே மாஸ்கோவிலுள்ள மின்னொளி நிலையங்கள் எதிரொலியைப் பதிவுசெய்ய ஆரம்பித்துவிட்டன.

## தென்வியட்னாமில் புதிய தேசிய ராணுவ சபை

சைகோன், ஜன. 31

தென்வியட்னாமில் புதிய தேசிய ராணுவசபையொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. இதில் 30 ஜெனரல்கள் இருப்பார்கள் என அறிவிக்கப்படுகிறது.

தென்வியட்னாமை நடுநிலைமையிலிருந்து பாதுகாக்குமுகமாகவே புதிய புரட்சியை நடத்தியதாய் அதன் தலைவர் கான் அறிவித்தார். இவர் அமெரிக்க ஆதரவாளர் எனக் கூறப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன், தென்வியட்னாம் நிலைமை பற்றி வெளிநாட்டுமந்திரி திரு. ரஸ்குடன் பலதடவை ஆலோசனை நடத்தினர். புதிய ஆட்சியை அங்கீகரிப்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை என அமெரிக்க ராஜாங்க இலாகா அறிவித்துள்ளது.

அமெரிக்காவுக்குப் புரட்சியில் சம்பந்தம் கிடையாது என சைகோனிலுள்ள யு. எஸ். ஸ்தானிகர் திரு. கெபட்லாட்ஜ் அறிவித்தார்.

## சக்ளா - ஹியூம் சந்திப்பு

லண்டன், ஜன. 31

ஐ. நா. பந்தோபஸ்து சபைக்கு இந்தியத் தூதுகோஷ்டியின் தலைவராகச் செல்லும் கல்வி மந்திரி திரு சக்ளா, இன்று லண்டனை விட்டு நியூயோர்க் புறப்பட்டார். நேற்று பிரிட்டிஷ் பிரதமர் சர். அலெக் ஹியூமுடன் அவர் ஒரு மணி நேரம் சம்பாஷணை நடத்தினர். சாம்ராஜ்ய மந்திரி திரு. டங்கன் சாண்ட்ஸும் அப்போது உடனிருந்தார்.

## சிரார்த்ததின நிகழ்ச்சிகள்

புதுடில்லி, ஜன. 31

காந்திஜியின் சிரார்த்ததினமான நேற்று சென்னையில், 20,000 பேர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

லண்டனில் நடைபெற்ற வைபவத்தில் இந்தியர்களும் மற்றும் பல நாட்டினரும் கலந்து கொண்டனர். பிரிட்டிஷ் தொழிற்கட்சி அங்கத்தினர் திரு. நோயல் பேக்கர் அங்கு பேசும்போது "காந்திஜி மனித குல வரலாற்றில் மிகப்பெரிய மனிதர்" எனக் குறிப்பிட்டார். யூகோஸ்லேவியா, சிக்கிம் ஆகியநாடுகளிலும் சிரார்த்த தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

## முதலமைச்சர் ராஜினாமா விஷயம்

புதுடில்லி, ஜன. 31

ஆந்திர முதலமைச்சர் திரு. சஞ்சீவிரெட்டியின் ராஜினாமா விஷயம், மத்திய பார்லிமெண்டரி சபையிடம் சமர்ப்பிக்கப்படும் என காங்கிரஸ் அக்கிராசனர் திரு. காமராஜ் கூறினார் அடுத்த மாதம் 10-ம் திகதி இக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

## லாவோஸிபாரில் ஒரு கட்சி ஆட்சி

ஸான்ஸிபார், ஜன. 31

ஸான்ஸிபாரில் ஒரு கட்சி ஆட்சி அமுல் நடத்தப்படும் என ஜனாதிபதி கருமே அறிவித்தார். ஆளும் கட்சியைத் தவிர இதர அரசியல் கட்சிகள் அங்கு தடைசெய்யப் பட்டன.

## ஹஜ் யாத்திரை

புதுடில்லி, ஜன. 31

அடுத்த மாதம் 18-ம் திகதி ஹஜ் யாத்திரீகர்களின் முதலாவது கோஷ்டி பம்பாயிலிருந்து புறப்படும். மார்ச் 29-ம் திகதியும், ஏப்ரல் 18-ம் திகதியும் இதர கோஷ்டிகள் புறப்படும். 800 ஹஜ் யாத்திரிகர்கள் பம்பாயிலிருந்து புறப்படுவார்கள்.

## ஹொண்டுராஸில் சதி முயற்சி

வாஷிங்டன், ஜன. 31

ஹொண்டுராஸில் அரசாங்கத்தைக் கவிழ்க்க நடைபெற்ற சதி முயற்சிகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாயும், பலர் கைது செய்யப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

## யுதாண்ட் சைப்ரஸ் விஜயம்: ரஷ்யா ஆட்சேபனை

நியூயோர்க், ஜன. 31

ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்ட் சைப்ரஸுக்கு விஜயம் செய்யவிருப்பதை ரஷ்யா ஆட்சேபித்திருக்கிறது.

சைப்ரஸ் விஷயம் இப்போது பாதுகாப்புசபைமுன் இருப்பதாயும், சபையுடன் கலந்தாலோசிக்காமல் தலைமைக் காரியதரிசி அங்கு விஜயம் செய்வது முறையற்றதென்றும் ரஷ்யா எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது. இக்கடிதத்தின் நகலகள் எல்லா அங்கத்தினர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என அது கேட்டுக் கொண்டிருக்கிறது.

மேற்கு நாடுகள் சைப்ரஸில் தலையிட்டு வருவதாயும் ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது. இப்பிரச்னையைச் சிக்கலாக்க வேண்டாம் என மேற்கு நாடுகளை அது கேட்டுக் கொண்டிருக்கிறது.

## "எல்லைக்காந்தி" விடுதலை

ராவல்பிண்டி, ஜன. 31

கான் அப்துல் கபார்கான் விடுதலை செய்யப்பட்டிருப்பதாயும், பெஷாவருக்கருகில் உள்ள தனது சொந்தக் கிராமத்துக்கு அவர் போய்ச் சேர்ந்திருப்பதாயும் பாகிஸ்தான் அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

ஹரிபூர் மத்திய சிறையிலிருந்து அவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

"எல்லைக்காந்தி" என அழைக்கப்பட்ட கான் அப்துல் கபார்கான், பாகிஸ்தான் அமைக்கப்பட்டது முதல் அநேகமாக சிறையிலேயே இருந்திருக்கிறார். இந்திய சுதந்திரத்திற்கு முன்பு அவர் இரண்டாண்டு சிறைவாசம் அனுபவித்தார்.

## காஷ்மீரில் சாஸ்திரி

புதுடில்லி, ஜன. 31

இலாகா அற்ற மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி நேற்று ஸ்ரீநகர் போய்ச் சேர்ந்தார். அவருடன் வெளிநாட்டிலாகா காரியதரிசி திரு. குண்டேவியாவும் சென்றிருக்கிறார்.

பிரதமர் ஷம்சுதீன், இதர மந்திரிகள், காஷ்மீரிலுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மற்றும் பலர் அவரை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

பின் பிரதமர் ஷம்சுதீனை அவர் சந்தித்துப் பேசினர். காஷ்மீரில் 2 நாள் தங்கவிருக்கும் சாஸ்திரி, பல அரசியல் தலைவர்களையும், மன்னர் கரன் சிங்கையும் சந்தித்தார்.

டில்லியிலிருந்து புறப்படுமுன் ஜனாதிபதி ராதாகிருஷ்ணன், பிரதமர் நேரு ஆகியோருடன் அவர் சம்பாஷித்தார்.

## கராச்சியில் ஊர்வலத்துக்கு தடை

கராச்சி, ஜன. 31

கராச்சி ஜில்லாவில் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவது ஒரு மாதத்துக்குத் தடை செய்யப்பட்டிருக்கிறது. எனினும் நாட்டில் ஜனநாயக ஆட்சியை நிலைநிறுத்தும்படி தொடர்ந்து போராட்டம் நடத்தப்படும் என எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன. 10 கோடி மக்கள் உள்ள நாட்டில் 80,000 பேர்மட்டும் அரசாங்கத்தைத் தெரிவு செய்யும் முறைக்குப்பதிலாக நேரடித் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என இக்கட்சிகள் கோருகின்றன. நேரடித் தேர்தல்கள் நடத்துவதை அரசாங்கம் ஏற்கமுடியாது என பாகிஸ்தான் சட்டமந்திரி கூறியிருக்கிறார்.

## தமிழ் நாட்டுச் செய்திகள்

### கைகலப்பு

ஆட்சேபகரமான முறையில் தேர்தல் சுலோகங்கள் சுவரில் எழுதப்பட்டிருந்தது சம்பந்தமாக மேட்டுப்பாளையத்திலுள்ள காங்கிரஸ்-கம்யூனிஸ்ட் ஊழியர்கள் கைகலந்தனர்.

### 6 கோடி சேமிப்பு

வருகிற மார்ச் மாதத்திற்கு முன் மேலும் ரூ. 2 கோடி சிறு சேமிப்புகள் தமிழ்நாட்டில் திரட்டப்படும். இதுவரை ரூ 4 கோடி சேர்ந்துள்ளது

### திருப்பதிக்கு விமானம்

திருப்பதியில் சிறிய விமானத்தளம் கட்டுவதற்கான பூர்வாங்க சர்வே நடத்தப்பட்டிருக்கிறது. சென்னையிலிருந்து திருப்பதிக்கு விமான சேவை நடத்துவதே இதன் உத்தேசம்.

### அச்சுத் திருட்டு

சென்னை அரசாங்க அச்சகத்திலிருந்து அச்சு எழுத்துக்களைத் திருடியதாக மூன்று அச்சக ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்த இரு கான்ஸ்டபிள்களுக்கு தலா ரூ. 50 பரிசளிக்கப்பட்டது.

### டாக்டர் முதலியார்

கல்வியின் தரம் மிகவும் குறைவாக இருப்பதற்கு மாணவர்களைக் குறைகூற முடியாதென்றும் திறமையும் கட்டுப்பாடும் இருக்க வேண்டுமானால் வகுப்புகளில் நெரிசல் இருக்கக்கூடாது என்றும் டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமிமுதலியார் ஆண்டுவிழாக் கொண்டாட்டம் ஒன்றில் கூறினர்.

### வேலைநிறுத்தம்

ஊதிய உயர்வு கோரிக்கையை வற்புறுத்தி கோவைப் பகுதியில் 8-க்கு மேற்பட்ட மில்களைச் சேர்ந்த 5000 மேற்பார்வை ஊழியர்கள் மார்ச் 12-ம் திகதி வேலைநிறுத்தம் செய்வார்கள் என அறிவிக்கப்படுகிறது.

### காலமானர்

சென்னை கல்வி இலாகா கூட்டு டைரக்டர் திரு. எஸ். பழனிச்சாமி தமது 52-வது வயதில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் காலமானர்.

### ஸி பி.

அண்ணாமலை பல்கலைக்கழக உபவேந்தர் டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமிஐயர் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் கல்கத்தா, கௌஹாத்தி ஆகிய இரு பல்கலைக்கழகங்களின் பட்டமளிப்பு விழா உரையை நிகழ்த்துவார்.

### சிவாஜியின் கண்ணீர்

ஆறுவயதில் படிக்க வசதியின்றி வயிறு வளர்க்க வீட்டை விட்டு ஓடியதாயும், அமெரிக்காவில் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் அங்குள்ள பேராசிரியர்களின் அறிவுரைகளைப் புரிந்து கொள்ள முடியாது வருத்தமுற்றதாயும் தனது காரியதரிசி அதைமொழி பெயர்த்ததை நினைத்தபோது சிறுவயதில் படிக்காததை எண்ணிக் கண்ணீர் வடித்ததாயும் சிவாஜிகணேசன் மகாதேவபட்டணம் உயர்நிலைப் பள்ளியில் பேசியபோது கூறினர்.

### பிள்ளைத்தமிழ்

முருகப் பெருமானின் பால்ய லீலைகளைப் பாடும் "திருத்தணிகை முருகன் பிள்ளைத் தமிழ்" என்ற நூலை முதலமைச்சர் பக்தவத்சலம் வெளியிட்டு வைத்தார். இதை இயற்றிய ஸ்ரீ ஈ. வி. வெங்கடசுப்ரமண்யத்துக்குபொன்னாடை போர்த்தப்பட்டது.

### நெசவாளர் பாதிப்பு

நூல்விலை அபரிமிதமாக உயர்ந்துள்ளதால் கோவையைச் சேர்ந்த 20000 கைத்தறி நெசவாளர்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### கள்ளுக்கடை

கள்ளுக்கடைகளைத் திறக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் அச்சடித்த துண்டுப் பிரசுரங்களை மக்களிடையே விநியோகித்துப் பிரசாரம் செய்ததாக குறிஞ்சிப்பாடியைச் சேர்ந்த புதுவை விட்டல் விஜயராகவலுநாயுடு கைதுசெய்யப்பட்டார்.

### காமராஜ்—அயூப் சந்திக்கட்டும்

காங்கிரஸ் அக்ராசனர் ஸ்ரீகாமராஜரும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கானும் சந்தித்துப் பேசி இருதேசங்களுக்குமிடையே பிரச்னைகளைத் தீர்க்க வழி காணலாம் என அகில இந்திய முஸ்லிம்லீக் தலைவர் திரு. ராஜாகான் சென்னை நிருபர்களிடம் கூறினர்.

### கலைக்காட்சி

வருகிற பெப்ரவரி மாதக் கடைசியில் பிரெஞ்சு அலங்காரக்கலைக்காட்சி ஒன்று சென்னையில் நடைபெறவிருக்கிறது.

### தாக்கப்பட்டார்

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த கும்பகோணம் சுதந்திராக்கட்சிக் காரியதரிசி திரு. அப்துல்சத்தாரை யாரோ பிடித்து அடித்துவிட்டார்கள். பொலிஸ் புலன்விசாரணை நடைபெறுகிறது.

### கோர்பூத்

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் சர். பால் கோர்பூத் வருகிற 3-ந் திகதி அண்ணாமலை பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்வார்,

### நீதிபதிக்கு அஞ்சலி

ஹைகோர்ட் நீதிபதி திரு ஜி. ஆர். ஜகதீசனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு தொழில் கோர்ட்டுகள், மாகாண மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள், ஹைகோர்ட் ஆகியவை மூடப்பட்டன.

### தீண்டாமை

தீண்டாமை என்பது நகரப் பகுதிகளில் பழங்கதையாகி விட்டதென்றும் கிராமப்பகுதிகளில் அதுமறைந்துவருகிறதென்றும் மந்திரி கக்கன் கூறினர்.

### வாபஸ்

68-வது டிவிஷனில் (புதுப்பேட்டை) கார்ப்பரேஷன் தேர்தலுக்கு அபேட்சாபத்திரம் தாக்கல்செய்திருந்த மாஜி தி.மு.க. மேயர் திரு. எம். எஸ். அப்துல்காதர் தமது அபேட்சை வாபஸ் பெற்றுக் கொண்டார்.

### தேர்தல் விடுமுறை

பெப்ரவரி 22-ந் திகதி சென்னை கார்ப்பரேஷன் கவுன்சில் தேர்தல் நடப்பதை முன்னிட்டு சென்னையில் சகல அரசாங்க அலுவலகங்களுக்கும் விடுமுறையாக்கப்படும்.

## 150 திபெத்தியர் இந்தியாவில் தஞ்சம்

புதுடில்லி, ஜன. 31

சிக்கிம், நேபாளம் வழியாக 150 திபெத்திய அகதிகள் பாரதத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

சீனரால் தாம் மிகவும் துன்புறுத்தப்பட்டதாக இவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# பிள்ளைகளைப் பார்க்க வசதி செய்துதாருங்கள்!

## நீதிபதியிடம் எதிரி கோரிக்கை

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறை பொலிஸ் நீதிமன்றத்தில் நேற்று நீதிபதி திரு அரசவாலடன் முன்னிலையில் காரைநகர் கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது முதலாவது எதிரியான கந்தையா பராசக்தி தனது பிள்ளைகளைக் காண்பதற்கு ஆவலாக இருப்பதால் அவர்கள் தன்னை வந்து காண்பதற்கு வசதி செய்யவேண்டுமென கண்ணீர் சிந்த நீதிபதியைக் கேட்டுக் கொண்டார்.

காரைநகர் மேற்கு வாசியான ஐயம்பிள்ளை கந்தையாவைக் கொலைசெய்ததாகவும், சதி செய்ததாகவும் அதே ஊரைச் சேர்ந்த வி. பரமசாமி, இறந்தவரின் மனைவி பராசக்தி ஆகிய இருவர்மீதும் குற்றம் சாட்டி ஊர்காவற்றுறைப் பொலிசாரால் இந்த வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

விளக்கமறியலில் இருக்கும் முதலாவது எதிரியான பராசக்தியை அவரது மகன் தெட்சணமூர்த்தி (வயது 13) வழக்குத தவணைகளின்போது வந்து காண்பது வழக்கம். நேற்றைய தினம் பராசக்தி சமீபத்தில் தான் பெற்றெடுத்த ஆண் குழந்தையுடன் கோர்ட்டிற்கு வந்தபோது பிள்ளைகள் எவரும் வந்து பார்க்கவில்லை. நகுலாம்பாள் (சாட்சியமளித்த சிறுமி வயது 11), சாந்தகுமாரி (வயது 7), சிவபாக்கியம் (வயது 5) ஆகிய மூன்று பெண் பிள்ளைகளும் கொலையுண்டவரின் தந்தையாருடன் சரவணைக் கிராமத்தில் வசித்துவருகிறார்கள். மூத்தமகன் தெட்சணமூர்த்தி காரைநகரில் வசித்துவருகிறார்.

நீதிபதி பிள்ளைகளின் பாதுகாவலரான இறந்தவரின் சகோதரரிடம் அடுத்த தவணையின்போது பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டுவந்து தாயாருக்குக் காட்டவேண்டுமென்றும், தாயும் பிள்ளைகளும் இந்த வழக்கு விஷயமாக எதுவும் பேசுகிறார்களா என உங்களில் ஒருவர் அவர்களுடன் நின்று கேட்டுக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.

வழக்கு விசாரணை அடுத்த மாதம் 6-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

# அக்கரைப்பற்று டெலிபோன் தொடர்பு துண்டிப்பு?

அக்கரைப்பற்று, வெள்ளி

அக்கரைப்பற்றிலிருந்து கடந்த ஆறுதினங்களாக வெளியூர்களுடன் டெலிபோன் தொடர்பு கொள்ள முடியாத மகா மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அக்கரைப்பற்று வைத்தியசாலையிலிருந்து ஒரு நோயாளியை மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு 'அம்புலன்ஸ்' வாகனம் பெறுவதற்காக அக்கரைப்பற்று வைத்திய அதிகாரி மட்டக்களப்பு வைத்தியசாலையுடன் டெலிபோன் தொடர்பு ஏற்படுத்துவதற்கு இருதினங்களாக முயற்சித்தபோதிலும் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முடியாது போய்விட்டது.

டெலிபோன் தொடர்வு ஏற்படுத்திக்கொள்வதில் ஏற்பட்டுள்ள சங்கடமான நிலைமை பற்றி அக்கரைப்பற்று பிரிவுக் காரியாதிகாரி டெலிபோன் பிரிவு உயர்தர அதிகாரியின் கவனத்திற்கு தந்திமூலம் தெரியப்படுத்தியுள்ளார். அக்கரைப்பற்றுப் பொலிஸ பொறுப்பு அதிகாரி மிகவும் முக்கியமான பொலிஸ் தகவல்களை மட்டக்களப்புத் தலைமைக் காரியாலயத்துக்குத் தெரிவிப்பதில் பெரும் சங்கடமாக இருக்கிறதென்றும் கடந்த ஐந்து தினங்களாக எந்தவிதமான தொடர்பும் டெலிபோன்மூலம் ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை என்றும் தெரிவிக்கிறார்.

கல்முனைக்கும் அக்கரைப்பற்றுக்கும் இடையில் டெலிபோன் தொடர்பு சம்பந்தமாக சமீபத்தில் ஏற்பட்டுள்ள பிழையைத் திருத்துவதற்கு தகுதியான ஊழியர்கள் இல்லை என்றும் சொல்லப்படுகிறது.

## ரூபா 30 அபராதம்

சாவகச்சேரி, வெள்ளி

கிளிநொச்சியைச் சேர்ந்த இராமனாதபுர வாசி செல்லத்துரை பரராசசிங்கம் என்பவர் சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட குடிவகை இரண்டு போத்தல் வைத்திருந்தார் என்று கிளிநொச்சி பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கிளிநொச்சி கோர்ட்டில் நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு 30 ரூபா அபராதம் விதித்தார்.

## தூதுகோஷ்டி

நங்கல், ஜன. 31

நேபாள பத்திரிகையாளர் தூதுகோஷ்டி நேற்று பாக்ரா நங்கல் அணைக்கட்டைப் பார்வையிட்டது.

# இரும்புத் தொழிற்சாலை

கொழும்பு, வெள்ளி

கம்பகா தொகுதியிலுள்ள வெரலவத்தையில் கட்டப்படவிருக்கும் அரசாங்க இரும்புத் தொழிற்சாலைக்கான அடிக்கல்லை கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா இன்று நாட்டினர்.

இந்த இரும்புத் தொழிற்சாலை அடுத்த ஆண்டு பூர்த்தியாக்கப்படுமென்றும், பூர்த்தியாக்கப்பட்டதும் விவசாய உபகரணங்களை முதலில் தயாரிக்கும் என்றும் மந்திரி தெரிவித்தார்.

இந்தத் தொழிற்சாலை இயங்கத்தொடங்கியதும் வெளிநாட்டுச் செலாவணி மிச்சப்படுத்தப்படுமென்றும் வேலையற்றிருப்பவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்குமென்றும் மந்திரி கூறினர்.

இத் தொழிற்சாலை இயந்திரங்கள் போலந்து நிபுணர்களால் நிறுவப்படும். 150 லட்சம் ரூபா செலவில் கட்டப்படவிருக்கும் இத் தொழிற்சாலை இலங்கைக்குத் தேவையான அதிகப்படியான விவசாய தளபாடங்களை உற்பத்தி செய்யும் என நம்பப்படுகிறது.

## முஸ்லிம் காரியதரிசி நியமன முயற்சியும் தோல்வி

நல்லூர், வெள்ளி

காங்கேசன்துறை பட்டின சபைக்கு சிங்களம் தெரியாத முஸ்லிம் காரியதரிசியை நியமிப்பது சம்பந்தமாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை பயனற்ற முயற்சியாக முடிவடைந்தது.

சிங்களத்தில் கடிதங்களை நடத்தி வரும் மாதம்பை பட்டின சபைக்கு ஸ்தலஸ்தாபனக் கமிஷனல் நியமிக்கப்பட்ட முஸ்லிம் காரியதரிசி சிங்களத்தில் அலுவல்களைக் கவனிக்க முடியாது கஷ்டப்படுகிறார். தமிழில் கருமங்களைச் செய்துவரும் காங்கேசன்துறை பட்டினசபைக்கு ஸ்தலஸ்தாபனக் கமிஷனல் சிங்களக் காரியதரிசி நியமிக்கப்பட்டதனைத் தொடர்ந்து உருவாகியுள்ள நிலையை அறிந்த மாதம்பை பட்டினசபைத் தலைவர் காரியதரிசி விவகாரம் சம்பந்தமாக காங்கேசன்துறைப் பட்டினசபையுடன் நேரடிப் பேச்சுக்கள் நடத்தினர்.

மாதம்பை பட்டினசபைக்கு நியமிக்கப்பட்டுள்ள முஸ்லிம் காரியதரிசியை கடமையாற்ற அனுமப்பதில் எந்த ஆட்சேபனையுமில்லையென்று தெரிவித்த பட்டினசபைத் தலைவர் காரியதரிசியின் தரம்நான்காக இருப்பதனல் அவரை இச் சபையின் செயலாளராக நியமிப்பதில் கஷ்டமிருப்பதாகத் தெரிவித்துள்ளார். காங்கேசன்துறைபட்டினசபைக்குமூன்ரும்தரமுடைய காரியதரிசி ஒருவரே தேவைப்படுகிறது.

காரியதரிசியின்றி நான்கு வாரங்களாகப் பட்டினசபை செயல்பட்டு வருகிறது. சென்ற வார முற்பகுதியில் பட்டின சபையின் முன்னைள் காரியதரிசி திரு. சி. கந்தசாமி பட்டின சபையின் பிரதம குமாஸ்தாவிடம் தமது பொறுப்புகளை ஒப்படைத்துச் சென்ருர். பொறுப்புகளை முதலில் ஒப்படைக்காமல் சென்ற திரு. கந்தசாமி ஸ்தலஸ்தாபனக் கமிஷனின் உத்தரவுப்படியே மீண்டும் திரும்ப வந்து தமது பொறுப்புகளை ஒப்படைத்துச் சென்ருரென்பது குறிப்பிடத்தக்கது.

## ரூபா 75 அபராதம்

சாவகச்சேரி, வெள்ளி

கிளிநொச்சி வாசி வல்லிபுரம் கதிரவேலு என்பவர் பதினைந்து போத்தல் சாராயத்தைச் சட்டவிரோதமாகத் தன் வசம் வைத்திருந்தாரென்று கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணையில் நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம் எதிரியைக் குற்றவாளியாக் கண்டு 75 ரூபாய் அபராதம் விதித்தார்.

# "உலக்கையால் அடித்ததால் உச்சியில் காயம்ஏற் பட்டிருக்கலாம்"

## கொலை வழக்கில் டாக்டர் சாட்சியம்

மாவிட்டபுரம், வெள்ளி

இரு சகோதரர்கள் தங்களின் சகோதரியின் கணவனை உலக்கையால் அடித்துக் கொலை செய்ததாகச் சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று மல்லாகம் நீதிபதி திரு ஜி. எச். எஸ் அத்துறிபாலு முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் சுழிபுரத்தைச் சேர்ந்த சகோதரர்களான நடராசா சற்குணம், பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் அதே ஊரைச்சேர்ந்த வயித்திலிங்கம் சபாபதியை சென்ற மார்கழி மாதம் 22-ம் திகதி உலக்கையால் அடித்துக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் ஆறுமுகம் ரூபாசிங்கம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

27-12-63-ல் நான் யாழ்ப்பாணம் மாவட்ட பதில்சட்டவைத்திய அதிகாரியாகக் கடமையாற்றினேன். அன்று காலை 10 மணியளவில் காலம் சென்றவரின் உடம்பில் பிரேத பரிசோதனை செய்தேன். அவரின் இடதுகண் இமைகள் வீங்கி இருந்தன. தலை உச்சியில் மூளையோடு வெடித்திருந்தது. பிடரியிலும் மூளையோடு உடைந்திருந்த மூளையும் சிதறி இருந்தது கண் இமைக்காயம் விழுந்ததினல் வந்திருக்கலாம். உச்சிக்காயம் உலக்கையால் அடித்தமையால் ஏற்பட்டிருக்கலாம். காலம் சென்றவரின் மண்டை ஓடுகள் வெடித்திருந்தமையாலும் மூளை சிதறியதாலுமே மரணம் சம்பவித்தது.

சாட்சியை எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்த போது சாட்சி கூறியதாவது:

உச்சியில் உள்ள காயம் விழுந்தாலும் வரக்கூடும். ஆனல் அது சாதாரணமாக ஏற்படக்கூடியதல்ல.

மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் கெங்காதரன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"வயித்திலிங்கம் சபாபதி என்பவரை சென்ற மார்கழி மாதம் 22-ம் திகதி பிற்பகல் 3-15-க்கு பரிசோதித்தேன். அவரின் தலையில் 3 அங்குல நீளக்காயம் இருந்தது. அக்காயம் அடித்தமையால் ஏற்பட்டதாகக் கூறினர். யார் அடித்தது என்ரே என்னத்தால் அடித்தது என்ரே கூறவில்லை. நானும் கேட்கவில்லை. அவரைப் பெரிய ஆஸ்பத்திரிக்குப் போகும்படி கூறினேன். அவரை நான் பரிசோதித்தபோது அவர் பூரண அறிவோடிருந்தார்.

நீதிபதி மேல் விசாரணையை அடுத்த மாதம் 11-ம் திகதிக்கு ஒத்திவைத்து அக்கிகதிவரை எதிரிகளை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். எதிரிகள் தரப்பில் திரு. ஆர் ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானர். சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஏ. எல். எம். ஹமீட் வழக்கை நடத்தினர்.

## பேக்கரிகள் பற்றி விசாரணை

நல்லூர், வெள்ளி

வடபகுதியிலுள்ள கிராமமுன்னேற்றச்சங்கங்கள் நடத்தும் பல பேக்கரிகள் பற்றி மேலிடத்திற்குச் செய்யப்பட்ட புகார்களைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது சம்பந்தமாக விசாரணை நடத்தி வருவதாகத் தெரிகிறது.

வடபகுதியிலுள்ள பல பேக்கரிகளை கிராமமுன்னேற்றச் சங்கங்களே பொறுப்பேற்று நடத்துகின்றன. பாடசாலைப் பிள்ளைகளுக்கான 'பணிஸ்' விநியோகத்தையும் இச் சங்கங்களே நடத்துகின்றன.

சில பேக்கரிகளில் நடைபெறும் சம்பவங்கள் பற்றிப் பொதுமக்கள் பலரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் செய்து கொண்ட புகார்களை விசாரணை நடத்தும் அதிகாரிகள் பல பேக்கரிகளுக்கு திடீர் சோதனை செய்து நிலைமையைக் கவனித்துவருவதாகவும் தெரிகிறது.

## "சங்கங்கள் வாழவேண்டும்"

தெல்லிப்பழை, வெள்ளி

சங்கங்களை ஆரம்பிப்பது சுலபம். ஆனல் அவைகளைத் தொடர்ந்து செயல்படுத்துவது கஷ்டமானது. யாழ்ப்பாணத்தில் உயிர் உள்ள, குற்றுயிரான, உயிரற்ற மூன்றுவகையான கிராமமுன்னேற்றச்சங்கங்கள் இருக்கின்றன. கிராமமுன்னேற்றச் சங்கங்கள் எதற்காக அமைக்கப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேறும் வழியையே காண முடியவில்லை' என்று வலி-வடக்குக் காரியாதிகாரி திரு. தி. முருகேசம்பிள்ளை மாவிட்டபுரத்தில் கிராமமுன்னேற்றச் சங்கமொன்றினை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

திரு முருகேசம்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் 'மக்கள் வாழ்க்கையை முன்னேற்றக்கூடிய தொண்டுகளில் சங்கங்கள் ஈடுபடுதல் வேண்டும்' என்று கூறினர். கிராமமுன்னேற்றச்சங்க நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.


ரெமி பொரேட்டட் டல்கம் பவுடர்




ரெமி பவுடரைப் பாவித்திருக்கிறீர்களா? சிறந்த பவுடருக்கு இணையான இந்த உயர்ந்த பவுடர் - வெகு நியாயமான விலைகளில் கிடைக்கும். அதி உன்னத மூலப் பொருட்களினுல் ஆக்கப்பட்ட ரெமி மிக லளிதமாக வாசனையூட்டப்பட்டுள்ளது. உங்கள் வியாபாரிசளிடத்தில் 2 சைஸ் டின்களில் கிடைக்கும்.

ஆவ்ரா அன் கம்பனி,
19, செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 7211, 7212



மில்க்வைற் நீல சவுக்காரம்

★

சவுக்காரம் வாங்கும் போது மில்க்வைற் நீல சவுக்காரம் என்று கேட்டுவாங்குங்கள்.




இது ஒரு சிறந்த தயாரிப்பு.

மில்க் வைற் நீல சவுக்காரம் ஒன்றே உங்கள் சலவை வேலையை பூர்த்தி செய்கிறது.

# வானொலி நிகழ்ச்சிகள்

## சனி 1-2-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-55 சைவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை, 6-45 கண்டதும் கேட்டதும்—செய்தி விளக்கம், 7-00 பாட்டு—எம். வர்ணகுலசிங்கம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு—இலக்கிய விமரிசனம்—எஸ். தனஞ்ஜெயராஜசிங்கம், 9-30 வயலின்—பி. எஸ். மணிஐயங்கார், 10-00 நேயர் விருப்பம்.

## ஞாயிறு 2-2-64

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-00 பௌத்தபோதனை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, முஸ்லிம் ஞாயிறு பாடசாலை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு—பஜனிஸ்வரி தில்லைநாதன், 5-45 திரை இசை.

இரவு 6-15 பாங்கு, 6-30 தாளவாத்தியக்கச்சேரி, 7-00 பாட்டு—ஏ. சோமசுந்தரம், 7-30 நாடகம் — பூம்புகார் பாவை—கே. அருளானந்தன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மாதர்விருப்பம், 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலைய ஒலிப் பதிவுகள்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

## சனி 1-2-64

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 வெங்கடேசன்—வயலின்.

பகல் 1-00 பிள்ளைக்கனி அமுது, 1-20 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 எஸ். வெங்கடேசன்—வயலின்.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 வாத்திய இசை.

இரவு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 வரவேற்பு—நாடகம், 8-00 உறையூர் டி. வி. சுப்ரமணியம்—பாட்டு, 8-40 தேசபக்திப்பாடல்கள், 9-15 இசைமாலை, 9-30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி—மாளவிகா கானன்—பாட்டு.

## ஞாயிறு 2-2-64

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-0 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 ராஜீஸ்வாமிநாதன்—பாட்டு, 8-15 பழனி விஜயலக்ஷ்மி—பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி—கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 சி. எஸ். ஜெயராமன்—பாட்டு.

மாலை 5-15 ராஜீ ஸ்வாமிநாதன்—பாட்டு, 5-45 இசைபயிற்சி.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 கொட்டுமுரசே- சித்திரம், 7-45 கே. பாஷ்யம்—பாட்டு, 8-45 ஸ்ரோட், 9-15 தேசபக்திப்பாடல்கள், 9-45 கிராதார்ஜுனியம் சங்கீத உபந்நியாசம்.

# கிரிக்கெட் போட்டிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஆர். டி. கருணைராஜன் கிரிக்கெட் கோஷ்டியினர் எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரியுடனும், பெப்ரவரி மாதம் 4-ம் திகதி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியுடனும் போட்டியிடவிருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் எம். டி. குணசேன ஸ்தாபன மனேஜர் ஆர். டி. கருணைராஜன், யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர்களான ஜே. பி. செல்லையா, கிறிஸ்டி ரிச்சார்ட், லூதா செல்வராசா, மூளாய் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் ஜி. செல்வத்துரை, மானிப்பாய் கிறீன் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் எஸ். ஜே. எஸ். வில்வம், யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களான எம். தவயோகராஜா, எஸ். கருணாநிதி, ஏ. மகாநாதன், வி. சண்முகம் ஆகியோர் இக்கோஷ்டியில் அங்கம்வகிப்பார்கள்.

பெப்ரவரி 7ம், 8ம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியுடன் போட்டியிடும்.

## பலநோக்கு சங்க நிர்வாகிகள்

தெல்லிப்பழை, வெள்ளி

தெல்லிப்பழை கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் சங்க மண்டபத்தில் திரு. சி. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. வலி. வடக்கு காரியாதிகாரி திரு. தி. முருகேசபிள்ளை பலநோக்கு என்னும் விஷயம்பற்றிப் பேசினர். புதிய நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. சி. நாகலிங்கமும், உப தலைவராக திரு. ந. சுந்தரலிங்கமும், காரியதரிசியாக திரு மு. தில்லை நடராஜாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## 'சமய வாழ்க்கை முக்கிய வழிகாட்டி'

தெல்லிப்பழை, வெள்ளி

"வீடு வீடாகத் திகழவும், காடு நாடாக மலர்ச்சியடையவும், மனிதன் மனிதனாக வாழவும் வேண்டுமானால் சமயவாழ்க்கையே முக்கிய வழிகாட்டியாக அமையவேண்டும்" என்று தெல்லிப்பழை கிழக்கு ஜெகநாத வீரபத்திர சுவாமி கோவிலில் நடைபெற்ற தைப்பூச திருவிழாவில் பேசுகையில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நம் முன்னோர் எத்தனையோ பெரிய ஆலயங்களைக் கட்டி வைத்துச் சென்றிருக்கிறார்கள். இவற்றை வழிவழியாக நிர்வகிக்கவேண்டிய பொறுப்பு நம்மைச் சார்ந்ததாகும். பணி என்பது வெறும் சடங்குகளிலும் ஆசாரங்களிலும்மட்டும் தங்கியிருக்கவில்லை, சமூகத்தின் அறிவுக் கண்களைத் திறந்து அவர்களின் துன்பம் போக்கி இன்பம் பெருக்குவதில் எமது கவனத்தைச் செலுத்துவதே சிறந்த தொண்டாகும். உண்மைச் சமயி ஒருவனுற்தான் ஒரு சமுதாயத்தைத் திருத்த முடியும்.

பாடசாலைகள் பிள்ளைகளின் அறிவு நிலையங்களாக விளங்குவதுபோல்கோவில்கள் பிள்ளைகளின் ஞான நிலையங்களாக அமையவேண்டியது அவசியம்."

## கும்பாபிஷேகம்

உடுவில், வெள்ளி

உடுவில் குமரகோட்டம் முருகமூர்த்தி கோவிலில் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவிருப்பதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர்.

வடபகுதியில்

# மேலதிக பாடசாலை பஸ்சேவை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

இ. போ. சவின் கிழக்கு டிப்போ இன்று தொடக்கம் யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வரைக்கும் டலாலி வீதிவழியாக புதிய மேலதிக பாடசாலை சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது. இதனுல் பல கல்லூரி மாணவர்கள் பெரிதும் பயனடைவார்கள் என்றும், முன்னர் இயங்கி வந்த பாடசாலை சேவைக்கு பெரும் ஆதரவு கிடைத்ததினுலேயே இந்த சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இ. போ. ச. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிய பாடசாலை சேவை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து காலை 6 மணிக்கு புறப்பட்டு புன்னாலைக்கட்டுவன் (6-30) மயிலிட்டி (6 55) வழியாக காங்கேசன் துறையை 7 மணிக்கு அடையும். பின்னர் காங்கேசன்துறையிலிருந்து காலை 7-15-க்கு புறப்பட்டு, காங்கேசன் துறை (7-15) மயிலிட்டி (7-20) புன்னாலைக்கட்டுவன் (7-45) சுந்தர்மடம் (8-10) வழியாக வேம்படி மகளிர் கல்லூரி வந்து பின்னர் மெயின் வீதிவழியாக கன்னியாஸ்திரிகள் பாடசாலைக்கும் சென்று சுண்டிக்குளியை காலை 8-30 மணிக்கு அடையும்.

மாலையில் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து பி. ப 3-15—க்கு புறப்பட்டு சுண்டிக்குளிக்கு 3-45-க்குப் போய் அங்கிருந்து சுந்தர்மடம் வழியாக முன்னைய பாதையில் காங்கேசன் துறைச் சந்தியை பி. ப. 5-15-க்கு அடையும்.

இந்த மேலதிக சேவையால் யாழ்ப்பாண நகரத்தில் உள்ள கல்லூரி மாணவர்களும், பலாலி வீதியில் உள்ள ஏனைய கல்லூரி மாணவர்களும் பெரிதும் பயனடைவார்கள் என இ. போ. ச. உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்

உரும்பிராய் இந்துக்கல்லூரி, இந்துமகளிர் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, கன்னியாஸ்திரிகள் மடப் பாடசாலை, சென். பற்றிக்ஸ்கல்லூரி, சென். யோன்ஸ் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரிஆகியவை இப்புதிய சேவையால் பயனடைய இருக்கும் பாடசாலைகளில் சிலவாகும்.

சென்ற வருடம் அக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுது நடைபெற்று வரும் பாடசாலைச் சேவையும் தொடர்ந்து நடைபெறும் என அதே உத்தியோகஸ்தர் தெரிவித்தார்.

## நாவாந்துறையில் 'கென்னடி' வீதி

யாழ்ப்பாணம், வெள்ளி

நாவாந்துறையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஒரு வீதிக்கு காலஞ்சென்ற அமெரிக்க ஜனதிபதி ஜோன் எப். கென்னடியின் ஞாபகார்த்தமாக 'கென்னடி வீதி' எனப் பெயரிடப்படவிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை யாழ். நகரமேயர் திரு டி. எஸ். துரைராசா கென்னடி வீதியைத் திறந்துவைப்பார். அத்துடன் நாவாந்துறை வட்டார அங்கத்தவர் திரு. சீ. அந்தோனிக்கும் மேயருக்கும் அங்கு வரவேற்புபசாரம் ஒன்று அளிக்கப்படவிருக்கிறது.

## கி. மு. சங்க நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, வெள்ளி

கரம்பன்மேற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திருவாளர்கள் வி. நவரத்தினம் எம். பி., பற்றிக், வி. ஆறுமுகம்; தலைவர்: திரு. க. வைத்தியநாதன்; உபதலைவர்கள்: திருவாளர்கள் கே. பெரியதம்பி, இ. மாணிக்கம்; காரியதரிசி: திரு. ந. வாமதேவன்; தனதிகாரி: திரு என். கந்தையா. நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

## அதிசய குழந்தை

புங்குடுதீவு வெள்ளி

புங்குடுதீவு மேற்கு இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி தங்கம்மா ஆறுமுகம் என்பவர் புங்குடுதீவு அரசினர் ஆஸ்பத்திரியில் திங்கட்கிழமை பிற்பகல் அதிசயப் பெண் குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளார். இக்குழந்தையின் முன்பக்கத்துத் தலையில் இரண்டு தசைக்கோளங்கள் கொம்பு வடிவத்தில் வளர்ந்து வளைந்து காணப்படுகின்றது. இரண்டுகோளங்களுக்கும் நடுவில் ஓர் சிறு துவாரம் காணப்படுகின்றது. அத்துவாரம் வழியாய் குருதி கசிந்த வண்ணம் இருக்கின்றது. இக்குழந்தைக்கு நெற்றி இல்லை கோளத்தின் தொடர்ச்சியாகவே மூக்கு அமைந்துள்ளது. மற்றும் உறுப்புகள் யாவும் ஒழுங்காக இருக்கின்றன.

இதுவரை குழந்தை உயிருடனிருக்கின்றது. இக்குழந்தையை ஏராளமானோர் சென்று பார்வையிடுகின்றனர்.

## பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் திவ்வியஜீவன சங்க இணை காரியதரிசியாக இருந்து கண்டிக்கு மாற்றலாகிச் செல்லும் திருமதி ருக்மணி இராசையாவுக்கு, சங்கத் தலைவர் திரு. செ. தனபாலசிங்கம் தலைமையில் அவரது இல்லத்தில் பிரிவுபசாரவைபவமொன்று இன்று நடைபெறும். வைபவத்தில் சுவாமி சச்சிதானந்தாஜியும் கலந்துகொள்வார்.

## சோவியத் உதவி

கொழும்பு, வெள்ளி

750 வீடுகள் கட்டி உதவுவது பற்றிய இறுதிப் பேச்சுவார்த்தைகள் சோவியத் நிபுணர்களுக்கும், வீடமைப்பு மந்திரி திரு. பதியுதீன் மாமூத்துக்குமிடையில் விரைவில் நடைபெறுமென நம்பப்படுகிறது.

கடந்த பத்தைந்து நாட்களாக சோவியத நிபுணர்கள் தேசிய வீடமைப்புக் கமிஷனர் திரு. ஈ. ஏ. டி' பெர்ஞண்டோவுடன் பல இடங்களைச் சென்று பார்வையிட்டனர்.

## தண்ணீர் விநியோகத்தில் அபிவிருத்தியில்லை

கொழும்பு, வெள்ளி

உள்ளூராட்சி சபைகள் தங்களுக்கென தண்ணீர் திட்டங்களைத் தயாரிக்கவும், விநியோகிக்கவும் முடியாமல் இருப்பதாகவும், நிதிக்குறைவும், தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோரின் பற்றுக்குறையுமே இதற்குக் காரணம் எனவும் தண்ணீர் விநியோகப்பகுதி டைரக்டர் திரு எப். இராசையா தமது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். கிராமப்புறங்களில் தண்ணீர் விநியோகிக்கும் பொறுப்பு உள்ளூராட்சி சபைகளிடமும், நகரப்பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகிக்கும் பொறுப்பு மத்திய அரசாங்கத்திடமுமாகப் பிரிக்கப்பட்டுள்ளதால் தண்ணீர் விநியோகத்தில் அபிவிருத்தி அடைய முடியவில்லை என்று குறிப்பிட்ட அவர், நாட்டின் சகல பகுதிகளின் தண்ணீர் விநியோகப் பொறுப்பையும் ஒரு மத்தியசபையிடம் கொடுப்பதே நல்ல வழியென்றும் அதன் மூலமே பெருந்தொகையான மக்கள் தண்ணீர் வசதி பெற முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.


உ
சிவமயம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் யாத்திரீகர்களின் அன்னதான சபையாரால் புதிதாக வாங்கிய காணியில் அன்னதான மண்டப

### அத்திவாரக்கல் நாட்டுவிழா

நிகழும் சோபகிருது ஆண்டு தை மாதம் 21-ம் நாள் (3-2-64) திங்கட்கிழமை முற்பகல் 9-45 மணியளவில்,

யாழ்ப்பாணம்—கொழும்பு பிரபல வர்த்தகர்

திரு. சி. சின்னத்துரை

அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும். அனைவரையும் சமுகந்தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
சி. க. தம்பையா,
ந. நா. அ. யா. அன்னதான சபைத்
நயினதீவு. தலைவர்.
31-1-64 1925

### தேவை

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசத்திற்கு 20 வயதுக்குக் குறையாத, 40 வயதிற்கு மேற்படாத ஒரு கணக்கியலர் தேவை. மாத வேதனம் அலவன்சுகள் உட்பட ரூபா 100/-இல் இருந்து 150/- வரை வழங்கப்படும். பிணைப்பணம் ரொக்கம் ரூபா 200/- கட்ட வேண்டும்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் தங்கள் தகைமை, நன்னடத்தைப் பத்திரங்களின் பிரதிகள் ஆகியவற்றுடன் 10-2-1964 க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர், வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம், 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என விலாசமிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பவேண்டும். தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப சம்பளம் கோரலாம்.

வை. மகேசன்,
தலைவர்,
வ. வி. உ. கூ. சமாசம்
யாழ்ப்பாணம்,
29-1-1964 1779

சரி விளம்பரம்

### கார் விற்பனை

EL போட் சயர் விற்பனைக்கு உண்டு. விபரம்:- கந்தசாமி, 33 கொழும்புத்துறை ரோட், கண்டுக்குளி 1923

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ளதும், புத்தம் புதிய பற்றறியும், என்ஜினும் உள்ள இ. என். ஆபிரம் வரிசையில் உள்ள ஏ 50 மோட்டார் ஒன்று விற்பனைக்குண்டு. 1964-க்குரிய லைசென்ஸும் உண்டு. பெருமாள், எக்சைஸ் அதிகாரி, பருத்தித்துறை என்ற விலாசத்திற்குத் தொடர்புகொள்ளவும். 1906

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக இலும் தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்

### விற்பனை

ஒரு ரயர் ரிகுறாவிஸ் மெசின், ஒரு கோம்சாஜ்ஜர் புத்தம் புதியது. விபரங்களுக்கு:- பெனில கலா மோட்டார் வேர்க்ஸ், கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 1924

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

அடுத்த மாதம் கெய்ரோவில்

# மண்டல சார்பற்ற தூதர்கள் மகாநாடு

## இலங்கை, ஐக்கிய அராபிய குடியரசு, யூகோஸ்லேவியா அழைப்பு அனுப்பும்

கெய்ரோ, ஜன. 31

**மண்டல சார்பற்ற உயர்தலைவர்கள் மகாநாடு ஒன்றை நடத்துவது சம்பந்தமான பூர்வாங்கக் கூட்டம், அடுத்த மாதம் கெய்ரோவில் நடைபெறுமென்றும் தூதர்கள் மட்டத்தில் இது நடைபெறுமென்றும் பாரதத் துணை வெளிவிவகார மந்திரி திரு. தினேஷ்சிங் கெய்ரோ நிருபர்கள் மகாநாட்டில் அறிவித்தார். இதற்கு அடுத்த கட்டமாக சம்பந்தப்பட்ட வெளிநாட்டு மந்திரிகளின் மகாநாடு கூடி உயர் தலைவர்கள் மகாநாட்டுக்கு முழு ஆயத்தங்களைச் செய்யுமென்றும் அவர் தெரிவித்தார்.**

நடுநிலைமைத் தலைவர்களின் முதல் மகாநாடு பெல்கிரேடில் நடைபெற்றது. இப்போது நடைபெறவிருக்கும் உத்தேச மகாநாடு 2 வது நடுநிலைமை மகாநாடாகும்.

இந்த மகாநாட்டுக்கான அழைப்பை ஐக்கிய அராபிய குடியரசு, இலங்கை, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகள் அனுப்புமென்றும், அல்லது இந்த நாடுகளின் சார்பாக ஐக்கிய அராபியக் குடியரசு அனுப்பும் என்றும் திரு. தினேஷ்சிங் கூறினார். மேற்குறிப்பிட்ட மூன்று நாடுகளும்தான் மண்டல சார்பற்ற மகாநாட்டைக் கூட்டவேண்டுமென அறிவித்துள்ளன. அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் பூர்வாங்கக் கூட்டத்தில், பெல்கிரேட் மகாநாட்டில் கலந்துகொண்ட நாடுகளின் தூதர்கள் கலந்துகொள்வார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உச்சித் தலைவர்களின் மகாநாடு வருகிற செப்டம்பர் மாதம் நடைபெறலாமெனத் தெரிகிறது.

மண்டல சார்பற்ற மகாநாடு சம்பந்தமாக திரு. நேருவின் கடிதம் ஒன்றைத் தாம் ஜனாதிபதி நாஸரிடம் கொடுத்ததாக திரு. சிங் தெரிவித்தார். யூகோஸ்லேவிய ஜனாதிபதி டிட்டோவுக்கு திரு. நேருவின் கடிதம் ஒன்றை எடுத்துக்கொண்டு அவர் நாளை பெல்கிரேட் செல்கிறார்.

இதற்கிடையில் பாண்டுங் மகாநாட்டைப் போன்ற 2 வது ஆசிய-ஆபிரிக்க மகாநாடு ஒன்றைக் கூட்டும் முயற்சியில் சீனாவும், பாகிஸ்தானும் தீவிரமாக இறங்கியிருப்பதாகத்

(2-ம் பக்கம் பார்க்க)

இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஏ. நவா (கொம்பனித்தெரு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) மொடேர்ன் (பதுளை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி

எம். ஆர். ராதா, மனோகர், வி. கே. ராமசாமி, புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, பி. எஸ். சரோஜா, சம்பந்தம்

மற்றும் பலர் நடிக்கும்



மொடர்ன் தியேட்டர்ஸ்

காட்டு ரோஜா

மதுரமான இசை, அருமையான படப்பிடிப்பு, சிறந்த டைரக்ஷன், குலுங்கக்குலுங்க சிரிக்க வைக்கும் ஹாஸ்யங்கள் அனைத்தும் நிறைந்த உன்னத மலர்ச் செண்டு.

கண்டுகளிக்கத் தவறாதீர்கள்.

### சுதந்திரக்கட்சி புனரமைப்பு

கொழும்பு, வெள்ளி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் புனரமைப்பது சம்பந்தமாக பெப்ரவரி மாதம் 13-ம் திகதி ஒரு ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்ட பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா ஒழுங்கு செய்துள்ளார். அரசாங்கக்கட்சி எம். பி.க்களை இக்கூட்டத்திற்கு வருமாறு அவர் அழைத்துள்ளார்.

---

### கறுப்புக் கொடி . . .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பாகுபாடான சட்டங்களைத் திணிப்பதை இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

தமிழ்பேசும் மக்கள் இந்நாட்டில் சந்தேகப் பிரஜைகளாகக் கருதப்படுகிறார்கள். மலைநாட்டிலுள்ள தமிழ்தோட்டத் தொழிலாளர்கள் (நாடற்றவர்கள் எனக் கருதப்படுபவர்கள்) சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களெனப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு இம்சிக்கப்படுகின்றனர். தமிழ் அரசாங்க ஊழியர் சேவையிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர். மொழி உரிமை பறிக்கப்பட்டு பெரும்பான்மையினரின் மொழியான சிங்களம்பலவந்தமாக தமிழ்பேசும் மக்கள் மீது திணிக்கப்படுகிறது.

எனவே நியாயமற்ற முறையில் அரசுபுரியும் இந்த அரசாங்கத்தின் சுதந்திரதினத்தைக் கொண்டாட்டங்களில் தமிழ்பேசும் மக்கள் கலந்துகொள்வதற்கு எவ்வித காரணமுமில்லை. ஆகையால் தமிழ்பேசும் மக்கள் சுதந்திரதினக் கொண்டாட்டங்களைப் பகிஷ்கரித்து அன்றைய தினத்தை துக்கதினமாக அனுஷ்டிப்பதுடன் வீடுகளிலும் ஸ்தலஸ்தாபனசபைக் கட்டிடங்கள்மீதும் கறுப்புக்கொடிகளைத் தொங்கவிட வேண்டும். கொண்டாட்டங்களில் பாடசாலை மாணவரும் கலந்து கொள்ளக் கூடாது.

---

### தமிழ் ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம், சனி

இலங்கையிலுள்ள அரசாங்க கூட்டுஸ்தாபனங்களில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்கள் தங்களுக்குள் ஒரு சங்கம் அமைத்துள்ளதாகவும் கூட்டுஸ்தாபனங்களில் தாங்கள் தமிழிலேயே கருமம் ஆற்றப்போவதாக முடிவுசெய்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

### முக்கிய விமான சேவை

சென்னை, ஜன. 31

இந்தியாவின் முக்கியவிமான சேவைகள் சென்னை, பம்பாய், நியூடெல்லி, கல்கத்தா ஆகிய இடங்களுக்கிடையே நாளை காலை ஆரம்பிக்கிறது.

இதுசம்பந்தமாக தபால் தந்தி இலாகா தபால்களுக்கு விசேஷ முத்திரைகள் வழங்கவிருக்கிறது.

இன்சூரன்சில்

# சிங்களத்தை திணிப்பது உரிமையை மறுப்பதாகும்’

## ஆங்கிலத்தில் அல்லது தமிழில் பொலிஸிகளை எழுத கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

சிங்களம் மட்டும் சட்டத்தை இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனில் புகுத்திப் ‘பொலிஸி’ப் பத்திரங்களைத் தமிழ்பேசும் மக்களுக்கு விளங்காத சிங்களப் பாஷையில் கொடுத்துவருவது அவர்களின் அடிப்படை உரிமையை மறுப்பதாகும் என்று கார்ப்பரேஷன் தலைவருக்கு இன்சூரன்ஸ் அமைப்பாளர்களும், பிரதிநிதிகளும் அனுப்பியுள்ள தந்தியில் தெரிவித்துள்ளார்கள்.

அத்தந்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இதன் மூலம் ‘பொலிஸி’ எடுப்பவர்களின் வெறுப்புக்கு ஆளாகியிருப்பதோடு எவ்வகையிலும் பொதுமக்களை அணுகமுடியாத நிலையில் தள்ளப்பட்டிருக்கிறோம்.

இவ்விதம் கருத்துவேறுபட்ட கொள்கையை இப்பகுதியில் அமுல்நடத்துவதனால் பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளமுடியாது. ஆதலால் உடனடியாக மாறுபாடான நிலையை மாற்றி, தமிழ்பேசும் பகுதிகளில் உள்ள ‘பொலிஸி’ தாரர்களுக்குப் புரியக்கூடிய தமிழ் அல்லது ஆங்கில மொழியில் ‘பொலிஸி’களை எழுதியனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

### களுவாஞ்சிக்குடியில் கூட்டம்

களுவாஞ்சிக்குடி, வெள்ளி

களுவாஞ்சிக்குடி வீரபத்திரர் ஆலய வெளியில் நாளை சனிக்கிழமை மாலை தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறுமென்றும் அதில் திருவாளர்கள் அமிர்தலிங்கம், மாணிக்கராசா, இராசதுரை, செனட்டர் மாணிக்கம், அரியநாயகம், செல்வி சலாமாணிக்கம் ஆகியோர் பேசுவரென்றும் அறிவிக்கப்படுகிறது.

---

### “தொழிற் சாலைகளை பூட்டவும்”

#### தமிழரசுக் கட்சிக் கிளை வேண்டுகோள்

தெல்லிப்பழை, சனி

இலங்கையின் சுதந்திர தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்கவேண்டுமென்றும், கடைகள், தொழில் ஸ்தாபனங்கள், சந்தைகள், தியேட்டர்கள் ஆகியவற்றை மூடி கறுப்புக் கொடிகளை பறக்கவிடும்படியும் தெல்லிப்பழை தமிழரசுக்கட்சிக் கிளை பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அன்றைய தினம் விளையாட்டுப்போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டாமென்றும், ஆலயங்களிலும், வீடுகளிலும் இறைவனை வணங்கி பஜனை செய்ய வேண்டுமென்றும் மேலும் அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

சீனாவிடமிருந்து

### இராணுவ உதவி ‘பெறவில்லை’

நேபாளம், ஜன. 31

சீனாவிடமிருந்து இராணுவ உதவிகளைப் பெறவில்லையென்றும் இராணுவ உதவி பற்றி சீனாவுடன் இதுவரை பேச்சுவார்த்தை நடத்தவில்லையென்றும் நேபாளம் அறிவித்துள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு மந்திரி வெளியிட்டுள்ள அறிக்கை பற்றி குறிப்பிடுகையிலேயே நேபாளம் வெளிநாட்டு மந்திரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### பிளாஸ்டிக் குண்டு வீசப்பட்டது

சைகோன், ஜன. 31

தென்வியட்னாமில் அமெரிக்க அதிகாரிகள் தங்கியிருக்கும் இடத்தில் இன்று பிளாஸ்டிக் குண்டு ஒன்று வீசப்பட்டது, இதனால் பல வியட்னாம் மக்கள் காயமடைந்துள்ளனர். இது தவிர வேறு எந்தவிதமான சம்பவங்களும் நடைபெறவில்லை. புதிய இராணுவ புரட்சிக்குப்பின் மீண்டும் பல பகுதிகளில் அமைதி நிலவுகிறது.

---

### பொலிஸ்பாதுகாப்புடன் சடலம் தகனம்

திருச்சி, ஜன. 31

தென்னாட்டில் ஹிந்தி திணிப்பை எதிர்த்து உடலில் பெட்ரோல் ஊற்றி தற்கொலை செய்துகொண்ட சின்னசாமி என்றவாலிபரின் உடல் திருச்சியிலுள்ள தென்னூர் மயானத்தில் பொலிஸ் பாதுகாப்புடன் அடக்கம் செய்யப்பட்டது.

சின்னச்சாமி அவருடைய நண்பன் நாகராசனுக்கு முதல் நாள் அனுப்பிய கடிதத்தில் தமிழை அளிப்பதற்காக ஹிந்தி சட்டம் தீட்டப்பட்டுவிட்டதென்றும், பெட்ரோல் ஊற்றி தற்கொலை செய்வதன் மூலம் ஹிந்தியால் வரும் ஆபத்தை மக்களுக்கு உணரச் செய்யப் போவதாகவும் எழுதியுள்ளார்.

இதுபற்றி மந்திரி கக்கன் தெரிவிக்கையில் ஹிந்தியை எதிர்ப்பதற்காக உயிரை விடுவது பைத்தியக்காரத்தனமென்றும், கடவுள் தந்த உயிரை அனாவசியமாக போக்கிக்கொள்ளக் கூடாதென்றும் கூறினார்.

### டிஸ்பென்ஸரி திறப்புவிழா

யாழ்ப்பாணம், சனி

“டாக்டர் பி. எஸ்ஸின் நிழலில் 24 வருடங்களாக நின்று உழைத்து அவருடைய மதிப்பைப் பெற்ற திரு. இராசரத்தினம் டாக்டர் அவர்களின் மறைவுடன் அவர் வழி நின்றுழைக்க முன்வந்தது பாராட்ட வேண்டியது”.

இவ்வாறு உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திற்கு முன்பாக திரு. ரி. கே. இராசரத்தினத்தினால் ஆரம்பிக்கப்படும் “பி. எஸ். டிஸ்பென்ஸரி”யைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மருந்துக்கள் விற்பனை செய்யும் மருந்துச்சாலையாக மட்டுமல்லாது அனுபவம் வாய்ந்த ஒரு டாக்டரின் சேவையை நோயாளர் பெறக்கூடியதாயும், பி. எஸ்ஸின் தயாரிப்பான பல தனிப்பட்ட மதிப்பைப் பெற்ற சில மருந்து வகைகளும் விநியோகம் செய்யக்கூடியதாக அமையும் என்று திறப்புவிழாவின்போது குறிப்பிடப்பட்டது.

---

உபநயன விஞ்ஞாபனம்

எதிர்வரும் 2-2-64 ஞாயிற்றுக்கிழமை பகல் 9-30 மணியளவில் பிரம்மஸ்ரீ ம. வெங்கிடாசல சர்மாவின் புத்திரன் இராஜகோபால சர்மாவுக்கு பிரம்மோபதேச உபநயனம் நிகழவிருப்பதால் பந்துக்களும் சிநேகிதர்களும் வந்து சமூகமளிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

இப்படிக்கு

ம. வே. சர்மா,

மட்டுவில் தெற்கு,

சாவகச்சேரி 192

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது